**உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,**

ந.க.எண்:953/ 2019 மாஉ திகு. நாள்.05.12.2019

பொருள்: மனைப்பிரிவு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை எண்கள்.5/6 - 14950.0 சதுர மீட்டர் (3.69 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு - திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. மனுதாரர் M/s. **Amrit Promoters,** சென்னை அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 16.08.2019.
2. மனுதாரர் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்:18.11.2019 (மனைப்பிரிவு சாலைப் பரப்பினை மனுதாரரால் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானப்பத்திரம்)
3. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள்:27.11.2019. (நன்னிலைத் தொகை, அபிவிருத்திக் கட்டணம் மற்றும் துணைக்கோள் நகர கட்டணம் செலுத்தக் கோரியது)
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14619/1988/பிசி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், அவர்கள் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
7. அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித் துறை நாள்:16.06.2003.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019.
11. 163-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண். 01 நாள் 19.02.2019.
12. மனுதாரர் கடிதம் நாள்:04.12.2019 (நன்னிலைத் தொகை மற்றும் அபிவிருத்திக் கட்டணம் மற்றும் துணைக்கோள் நகர கட்டணம் செலுத்தப்பட்டது).

For AMRIT PROMOTERS
Partner

**********

1. மனைப்பிரிவு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவை

Scanned with CamScanner

எண்கள்.5/6 - 14950 சதுர மீட்டர் (3.69 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு - திட்ட அனுமதி வழங்க பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.உ.தி.கு எண்.53/2019 என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 7-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னர், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71, RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

6. பார்வை 2-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு பேரூராட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலக பொறியாளர் / செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

8. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் பழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவில் அமையும் வடிகால் மற்றும் தெரு விளக்கிற்கு மனுதாரரிடம் உரிய கட்டணம் வசூல் செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் உள்ள சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே

For AMRIT PROMOTERS

Partner

Scanned with CamScanner

(கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2) பார்வை 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி "The Tamil Nadu Government, in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Ragulation & Development) Act 2016. The promoter has to advertises, Market book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5-12-19

உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

5/12/19
5-12-19

**இணைப்பு :**
மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்)

**பெறுநர்:**
தனி அலுவலர்/ புதுப்பாக்கம் ஊராட்சி,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்போரூர்.
காஞ்சிபுரம் மாவட்டம்.

For AMRIT PROMOTERS
Partner

**நகல்:**
**M/s. Amrit Promoters,**
AB 137, 1st Floor, 4th Avenue,
Shanthi Colony, Anna Nagar,
Chennai- 600040.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சென்னை - 2 அவர்களுக்கு
மனைப்பிரிவு வரைபடம் (ம)
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன்
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம்,
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் (ம) நிபந்தனைகள்

Scanned with CamScanner

அனுப்புநர்
திரு.எம்.வெங்கட்ராகவன்
தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்
M/s.Amrit Promoters.,
AB 137, 1st Floor, 4th Avenue,
Shanthi Colony, Anna Nagar,
Chennai - 600040.

ந.க.எண்.5161/2019/ஆ1 நாள். .12.2019

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Amrit Promoters., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.5/6-ல் 14950சதுர மீட்டர்(3.69 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - கட்டணங்கள் செலுத்தக் கோருதல் - தொடர்பாக.

பார்வை - 1.உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.953/2019/ மாஉதிகு நாள்.26.09.2019.
2.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கை நாள்.17.10.2019.
3.தானபத்திரம் எண். 15269/2019 நாள்.12.11.2019.
4.ஊராட்சி மன்றத் தீர்மான எண். நாள். .11.2019

-------------

பார்வை 1-ல் காணும் உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Amrit Promoters., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.5/6-ல் 14950சதுர மீட்டர்(3.69 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க, கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 2-ல் காணும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கையின்படி, பார்வை 3-ல் காணும் தானபத்திரத்தின்படி, ஊராட்சிக்கு 59913.60 சதுர அடி (சாலை, பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடுகள்) ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கும்பொருட்டு, மனுதாரர் கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.

கட்டண விவரம்

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம் | அளவுகள் | செலுத்த வேண்டிய கட்டணம் | வங்கி வரைவு அளிக்கப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1. | வளர்ச்சிக்கட்டணம் ஒரு சதுர அடிக்கு ரூ.1/- ரூபாய் வீதம் 160922 ச.அடிக்கு (160922- 59913.60 = 101008.40) | 101008 ச.அடி | 1,01,008/- | **Rs.1,04,008/-** Special Officer, Pudupakkam Panchayat |
| 2. | கள ஆய்வு கட்டணம் | | 3,000/- | |
| | மொத்தம் | | 1,04,008/- | |

For AMRIT PROMOTERS
Partner



Scanned with CamScanner

மேற்படி, குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சியில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை வங்கி வரைவாக ஊராட்சி செயலர் மூலம் அளித்து ஊராட்சி மன்றத்தீர்மானம் நிறைவேற்றி, இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

நகல் - ஊராட்சி செயலர், புதுப்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.
(விண்ணப்பதாரரிடமிருந்து கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, செலுத்தப்பட வேண்டிய கட்டணத்திற்கான வங்கி வரைவு பெற்று ஊராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி அவர்களின் ஒப்புதலுக்கு அளிக்கும் பொருட்டு).

For AMRIT PROMOTERS

Partner

Scanned with CamScanner

**தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.**

ந.க.எண்.5161/2019/ஆ1.

நாள். .12.2019

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Amrit Promoters., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.5/6-ல் 14950சதுர மீட்டர்(3.69 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை -
1.உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.953/2019/ மாஉதிகு நாள்.26.09.2019.
2.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-1-ன் கள ஆய்வு அறிக்கை நாள்.17.10.2019.
3.தானபத்திரம் எண். 15269/2019 நாள்.12.11.2019.
4.Tamilnadu Generation and Distribution Corporation Ltd. Technical Branch அவர்களின் சுற்றறிக்கை Mem no. CE/Comml/EE3/AEE3/ F.Layout/ D.63/2019, dt.18.05.2019.
5.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.11.12.2019.
6.புதுப்பாக்கம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.116 நாள்.10.12.2019. மற்றும் பலவகை வரவு ரசீது எண்.6984 நாள்.13.12.2019.

For AMRIT PROMOTERS
Partner

*********

**உத்திரவு**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம் M/s.Amrit Promoters., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.5/6-ல் 14950சதுர மீட்டர்(3.69 ஏக்கர்) பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு, உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களின் ம.வ./மா.உ.தி.கு எண்.53/2019-ன்படி ஒப்புதல் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் தானபத்திரத்தின் மூலம் புதுப்பாக்கம் ஊராட்சிக்கு சாலை, பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடுகள் 59913.60 Sq.ft பரப்பு ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 4(ம) 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.1,01,008/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஆயிரத்து எட்டு மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.6984 நாள்.13.12.2019-ல் செலுத்தப்பட்டதின் அடிப்படையில், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம்,

Scanned with CamScanner

பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளான 19 (இ) மற்றும் 19(உ) குறித்து ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

7) இம்மனைப்பிரிவு தொடர்பாக பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். நிபந்தனைகள் மீறும் வகையில் இம்மனைப்பிரிவு நிலஉரிமை குறித்து ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

8) இம்மனைப்பிரிவிற்கு மனுதாரரிடமிருந்து கூராய்வு கட்டணம் மட்டும் பெறப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

M/s.Amrit Promoters.,
AB 137, 1st Floor, 4th Avenue,
Shanthi Colony, Anna Nagar, Chennai - 600040.

நகல் - ஊராட்சி செயலர், புதுப்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

For AMRIT PROMOTERS

Partner



Scanned with CamScanner